**செய்தி வெளியீடு எண்: 23/2023** **நாள்: 01.03.2023**

## <u>சென்னை மெட்ரோ இரயில்களில் கடந்த மாதம் 63.69 லட்சம் பயணிகள் பயணம்</u>

## <u>சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தகவல்</u>

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னையில் உள்ள மக்களுக்கும், மெட்ரோ இரயில் பயணிகளுக்கு போக்குவரத்து வசதியை அளித்து வருவதோடு நம்பக தன்மையான பாதுகாப்பான வசதியை ஏற்படுத்தி வருகிறது.

அந்த வகையில் நடப்பு ஆண்டு கடந்த மாதம் 63 லட்சத்து 69 ஆயிரத்து 282 பயணிகள் மெட்ரோ இரயிலில் பயணித்துள்ளதாகவும் இந்த பயணிகள் எண்ணிக்கை கடந்த ஜனவரி மாதத்தை விட சற்று குறைவாகவே இருக்கும் என்று சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

01.01.2023 முதல் 31.01.2023 வரை மொத்தம் 66,07,458 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

01.02.2023 முதல் 28.02.2023 வரை மொத்தம் 63,69,282 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

அதிகபட்சமாக 10.02.2023 அன்று 2,61,668 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

2023, பிப்ரவரி மாதத்தில் மட்டும் க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 20,20,027 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர். பயண அட்டைகளை (Travel Card Ticketing System) பயன்படுத்தி 39,85,113 பயணிகள் பயணித்துள்ளார்கள் .

நடப்பாண்டில் கடந்த ஜனவரி மாதத்தில் 66 லட்சத்து 7 ஆயிரத்து 458 பயணிகள் பயணித்துள்ளனர். பிப்ரவரி மாதத்தில் 63 லட்சத்து 69 ஆயிரத்து 282 பயணிகள் பயணித்துள்ளனர். கடந்த பிப்ரவரி மாதம் 28 நாட்கள் என்பதால் ஜனவரி மதத்தை விட பிப்ரவரி மாதத்தில் பயணிகளின் எண்ணிக்கை சற்று குறைவாகவே காணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில்களில் பயணிப்பவர்களுக்கு க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு மற்றும் பயண அட்டைகளை (Travel Card) பயன்படுத்தி பயணிக்கும் பயணிகளுக்கு 20% கட்டணத் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களை பராமரிப்பதில் மிகுந்த ஒத்துழைப்பு நல்கிவரும் அனைத்து பயணிகளுக்கும் சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**